**நகராட்சி நிர்வாக ஆணையர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்,**

**எம்.ஆர்சி நகர், சென்னை–600 028.**

**முன்னிலை: முனைவர்.கா. பாஸ்கரன், இ.ஆ.ப.,**

**ந.க.எண்.26429/2018/உ.வ** **நாள்.21.08.2019**

**பொருள்:** பணியமைப்பு – தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பப்பணி– உதவி திட்ட அமைப்பாளர் பதவியிலிருந்து திட்ட அமைப்பாளராக– பதவி உயர்வு – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை:** நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.26429/2018/உவ நாள். 26.07.2019.

*****

**ஆணை:**

பார்வையில் உள்ள செயல்முறை ஆணையில் 2018–19–ம் ஆண்டிற்கான திட்ட அமைப்பாளர் பணியிடத்திற்கு தேர்ந்த பெயர்ப்பட்டியல் அங்கீகரித்து ஆணைவெளியிடப்பட்டது.

2) அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு நகராட்சி பணிவிதிகள் 1970 விதி 26–ன் கீழ் திரு. ஆர். விஜய், உதவி திட்ட அமைப்பாளருக்கு (Assistant Programmer) திட்ட அமைப்பாளராக (Programmer) பதவி உயர்வு வழங்கி கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | தற்போதுள்ள நகராட்சி அலுவலகம் | திட்ட அமைப்பாளராக பதவி உயர்வு வழங்கும் அலுவலகம் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1. | திரு. ஆர். விஜய்,<br>உதவி திட்ட அமைப்பாளர் | ஆம்பூர் | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், செங்கற்பட்டு (இ) தாம்பரம் |

3) ஆம்பூர் நகராட்சி ஆணையர், திரு. ஆர். விஜய், அவர்களை பணியிலிருந்து உடன் விடுவிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார். திரு. ஆர். விஜய், அவர்களை திட்ட அமைப்பாளராக பணியில் சேர அனுமதித்து பணி சேர்ந்த விவரத்தினை தெரிவிக்க செங்கற்பட்டு மண்டல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4) மேற்காணும் செயல்முறை ஆணை பெற்றமைக்கு ஒப்புகை அளிக்க சம்மந்தப்பட்ட அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒம்/– கா. பாஸ்கரன்

நகராட்சி நிர்வாக ஆணையர்

பெறுநர்:

1.திரு. ஆர். விஜய், உதவி திட்ட அமைப்பாளர், ஆம்பூர் நகராட்சி. (நகராட்சி ஆணையர் மூலமாக)

2. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு. (இருப்பு– தாம்பரம்)

3. நகராட்சி ஆணையர், ஆம்பூர்.

நகல்

திட்ட ஆராய்வாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை–28

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்